
குருவடி!
திருவடி!

கவிஞர். ச.கந்தசாமி





குருவடி!
திருவடி!

கவிஞர் ச.கந்தசாமி

திருக்குறள் பேரவை, சென்னிமலை.

ஆண்டு : முதற்பதிப்பு - 2026

நூல் பெயர்: குருவடி திருவடி

நூல் அளவு : 1 x 8 (மெப்லித்தோ பேப்பர்)

ஆசிரியர் : ச.கந்தசாமி

வெளியீடு : திருக்குறள் பேரவை
சென்னிமலை
97889 04755

அச்சிட்டோர் : குறள் அச்சகம்,
ஈரோடு
8760382929

விலை : ரூ. 25.00

“செம்மொழிச் செம்மல்”
புலவர். பெ.திருவள்ளுவர், எம்.ஏ., எம்.எட். எம்.ஃபில்.,
தலைவர், திருக்குறள் பேரவை.
சென்னிமலை.

35, பிராட்டி அம்மன் கோவில் தெரு,
சென்னிமலை 638 051.

அணிந்துரை

“செந்தமிழ் நற்கவிஞன் செறிவுடைய
சிந்தனையினன் ஆட்சியர் கந்தசாமி
சந்ததமும் தமிழ்ப்பணியில் சலியாத
தொண்டுடையான் சால்பின் மிக்கான்”

என்று புகழத்தகு பேரன்பன், பண்பின் பெட்டகம், நமது ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி இ.ஆ.ப. அவர்களின் பயணித்த அனுபவப் பிழிவாய்; ஆழ்சிந்தனையின் வெளிப்பாடாய் உருவான உன்னத நூல் “குருவடி திருவடி” என்பதாகும்.

மாவட்ட ஆட்சியர் பணியில் அப்பழுக்கற்றவராய், ஆர்வம் மிக்கவராய், இரண்டாவது ஆண்டில் அடியெடுத்துவைக்கும் இவர்,

“ஞாலம் கருதினும் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின். (குறள் 484)

என்ற உலகப்பொதுமறையின் உன்னத வழியில் மிகத் திறமையுடன் தமிழ்நாடு அரசின் திட்டங்களை வகுத்தளித்து. முறையாகச் செயற்படுத்தி, தமிழக அளவில் ஈரோடு மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக உயர்த்திட முயன்றுவரும் தன்னேரிலாத தகைசால் அதிகாரி இவர். கடந்த ஆண்டு அரசுத் தேர்வில் +2 தேர்வில் தமிழக அளவில் முதலிடம் பெற்றுத்தந்தவர்.

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கேற்ப இவரது பள்ளிப் பருவத்திலேயே திருக்குறள் மீது அளவற்ற பற்றுடையராய் ஆர்வம் மிகக்கொண்டு அளப்பரும் திருக்குறள் பணிகளைத் தொடர்ந்து செய்துவரும் சீர்மிகு செம்மல். சங்க இலக்கியங்களைக் கற்று, குறிப்பாக யாப்பிலக்கணம் கற்று மரபுக் கவிதைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுபவர், வெண்பாக்களை எழுதுவது அரிதல்ல, மிக எளிதென எண்ணி நூற்றுக்கு மேற்பட்ட வெண்பாக்களை யாத்தளித்தவர்.

சொல்வன்மை மிக்கவராய் இலக்கிய மேடைகளில் வலம் வரும் இவர் நுண்மான் நுழைபுலம் மிக்கவர். மாணவர்கட்குத் தமிழார்வத்தை வளர்த்து வருபவர். தமிழ்சார்ந்த மன்றங்கள்; குறள்நெறி பரப்பும் அமைப்புகளின் வளர்ச்சிக்கு எண்ணற்ற பேருதவிகள் நாளும் செய்துவரும் நற்சான்றோர் பெருமகனார் இவர். இத்தகு பெருஞ்சிறப்புக் காரணமாக தமிழமிழ்து அறக்கட்டளை ‘‘தமிழ் மறைக் காவலர்” என்ற உயர் விருது வழங்கிப் போற்றியது.

ஆட்சிப்பணியையும், தமிழ்த்தொண்டினையும், தன்னிரு கண்களாகக் கொண்ட இவரின் வெளியீடாக “குருவடி திருவடி” என்ற 40 வெண்பாக்களால் படைக்கப்பட்ட கவிதைநூல்

வெளிவருகிறது. யாப்பிலக்கண மரபு மாறாமல் நன்னடையில் சொல்லோட்டமும், ஆழ்பொருளும் உள்ளடக்கிய நூலிது.

இதில் (பாடல் எண் - 8) உலகத்தால் உள்ளத்தை மாற்றி, உலகத்தின் போக்கைத் திருத்தவந்த புத்தர் எம் சற்குரு என்பது குருவின் மரியாதையை உயர்த்திக் காட்டுகிறது. (பாடல் எண் - 9) வில்லிலிருந்து விடுபட்ட அம்பென உள்ளத்தைத் தைக்கும்படி சொல்லைத் தேர்ந்து சொல்ல வல்லாரை - என்ற பாட்டில் உவமை அணியை வைத்துள்ளார்.

அதேபோல (பாடல் எண் -11) முன் செல்லும் ஏராய் முறை செய்யும் வேந்தனாய் - என்ற ஒப்பீடு மிகப் பொருத்தமாக உள்ளது. சிரிப்பின் வகைகளை (பாடல் எண் -16) மூன்றாகப் பிரித்து,

மலர்ந்திட்ட பூவாய், மழலை சிரிப்பு
உலர்ந்த கனிபோல் தளர்ந்த முதியோரின் சிரிப்பு
நதிபோல் நகரும் - முனிவரின் சிரிப்பு

எனப் புதிய சிந்தனையுடன் குறிப்பிட்டுள்ளது பாராட்டுதற்குரியதாகும்.

(பாடல் எண் 18) குடத்தை அமிழ்த்தக் குளத்தின் குளிர்நீர்

குடத்தில் நுழையும் குருவின் மடத்தை அகற்றும் அருஞ்செயல் என்ற எடுத்துக்காட்டு இயல்பாக எளிமையாக அமைந்துள்ளது. (பாடல் எண் - 20) கல்லார், கற்றார் இருவர்க்கும் உள்ள வேறுபாடு கூறும்போது.

குன்றினின்று நோக்குவார் கற்றார் – என்ற தொடர், குன்றேறி யானைப் போர் கண்டற்றால் என்ற திருக்குறளின் எடுத்துகாட்டை நினைவுபடுத்துகிறது. குறள் கற்ற புலமை வெளிப்படுகிறது.

(பாடல் எண் – 26) சேற்றில் விழுந்தாலும் சோற்றில் கலந்தாலும் ஒன்றே, செழுந்தேனாவேன் உன்னில் சேர்ந்து என்பது; பாராட்டும் பண்புடைத் தொடராக அமைந்துள்ளது. (பாடல் எண் – 31) விண்ணில் இருப்பதாய் வீணாரிங்கே சொன்ன இறை, மண்ணில், மரத்தில், கண்ணில் தெரிவதைக் காட்டிய குரு என்ற வைர வரிகள் நமது கவிஞர் ச.கந்தசாமி அவர்களஇன் ஆழ்மனதில் பதிந்துள்ள கருப்புச்சட்டைக் கொள்கையின் வெளிப்பாடாய்க் கசிந்துள்ளது.

நிறைவாக சுருங்கக் கூறின், "குருவடி திருவடி" நூல் முழுதும் குருவின் பெருமைகளைக் கூறுவதுடன், தமிழ்மறை பொழிந்து, வெண்பா வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் பேரழகைக் கண்டேன்; தமிழின் அமுத சொற்கள் இணைந்துள்ள கவியாரம் கண்டு களிப்புற்றேன்.

கற்கண்டுக் கவியமுது கன்னல் சுவையாய் சொற்கொண்டு வந்த கொம்புத்தேன் பருகித் திளைத்தேன்.

" வெண்பா வித்தகர் தொடுத்த தமிழ்ப்பா
ஒண்பா சுவை நிறைந்த கவிப்பா
சலிப்பே இல்லாத தெவிட்டாத் தேன்பா
சுவைத்தே மகிழ்வீர்! சுவைக்கச் செய்வீர்!

“ பத்துப் பறவைகளோடு பழகி
நீங்கள் ஒரு பறவையாக முடியாது
ஆனால்
பத்துப் புத்தகங்களோடு பழகிப் பாருங்கள்
நீங்கள் பதினோராவது புத்தகமாகப்
படிக்கப் படுவீர்கள்

என்ற சென்னிமலைத் தாயூரினர் மகாகவி ஈரோடு தமிழன்பன் ஐயா அவர்களின் கூற்றுப்படி

“குருவடி திருவடி” படித்துப் பாருங்கள், பயன்பெறுவீர்கள்.

இந்த அற்புதப் படைப்பின் ஆசிரியர், ஆட்சியர் பணியில் மிக உன்னதநிலை எய்திடவும். அவரது படைப்புகள் வழி மேலும் உயர்ந்து சீர்பல பெற்றுப் பெரும்புகழுடன் வாழ்வாங்கு வாழவும் சென்னிமலை சேயோன் சீரடி பணிவோம்.

தமிழ் நம் விழி, குறள் நம் வழி.

சென்னிமலை
12.07.2026

என்றும் குறளுணர்வுடன்,
பெ.திருவள்ளுவர்.

குருவடி! திருவடி!

குருவா யெமக்குக் கிடைத்த வரமே;
திருவாய் மலர்ந்தே தெளிவைத் - தருவாய்;
மகிழ்ந்தேன்; மதியா லுயர்ந்தேன்; மனமே
நெகிழ்ந்தேன் உனையே நினைந்து. *-1*

மறைகள் விளக்கும் மனிதருள்மா ணிக்கம்
குறைகள் களைந்தெம் குணத்தை உயர்த்தும்
குருவாய் விளங்கும்; குனிந்தே வணங்கத்
திருவாய்முன் நிற்கும் தொடர்ந்து. *-2*

அருள்தரும் ஞானி, அறியாத வாக்கின்
பொருள்தரும் ஆசான்; புவியல் - இருள்தரும்
பொன்பொரு ளாசைப் பெருநோய்க்கு மாற்றாக
நன்பொருள் தந்திடுவார் நம்பு. *-3*



இறைவடிவம் என்னவென் றெங்கெங்கோ தேடும்
குறையுடைய மாந்தர்காள் கோடி - நிறையுடைய
எம்குரு நிற்கின்றா ரெம்முன் இதமளித்து;
எம் குருவே எங்கள் இறை. -4

குருவை நினைந்து குருவை வணங்கி
குருவை முழுமுதலாய் கொண்டு - குருவை
இறைவடிவாய் கண்டேன்; இருளகற்றும் நாத
மறைமுடிவாய் கொண்டேன் மகிழ்ந்து. -5

புத்தகத்தை வாசித்துப் போதிக்கும் ஆளல்ல;
வித்தைகள் காட்டுகின்ற வேடிக்கை - புத்தரல்ல;
ஞானத்தின் ஊற்றாக ஞாலத்தி லேயுதித்து
வானத்தை காட்டவந்த வான். -6



கல்லின்முன் நின்று கடகட வென்றுநிதம்
சொல்லில் துதிகள் சொரிந்தபின்னும் - சொல்லின்
பொருளை அறியாத பக்தரல்ல; ஞாலத்
திருளை கிழிக்கும் ஒளி. *-7*

உலகத்தை மாற்றவந்த உத்தமர்போ லின்றி
உலகத்தார் உள்ளத்தை மாற்றி - உலகத்தின்
போக்கைத் திருத்தவந்த புத்தரெம் சற்குரு
யாக்கைபோ லல்ல உயிர். *-8*

வில்லி லிருந்து விடுபட்ட அம்பெனச்
சொல்லி லிருக்கும் பொருள்பிறர்தம் - உள்ளத்தை
தைக்கும் படிசொல்லைத் தேர்ந்துசொல்ல வல்லாரை
வைக்குமே நாதனென ஊர். *-9*



இறையின் வடிவம்; இதயம் முழுதும்
உறையும் அருளின் உருவம்; - முறையென்
றுலகம் பகரும் உதவும் குணத்தின்
திலகம்; குருவைத் தொழு. -10

முன்செல்லும் ஏராய்; முறைசெய்யும் வேந்தனாய்;
பின்செல்லும் மாந்தரைப் பேணும் அரணாய்
விளங்கும் குருவை வணங்கும் குணத்தார்
களங்கம் களைந்தார் கனிந்து. -11

உள்ளதுதன் உள்ளத்தில் உள்ளதென் றெல்லார்க்கும்
உள்ளன்பால் ஞானி உரைத்திடத்தான் - உள்ளினான்;
சொல்லெதுவும் காணவில்லைச் சொல்வதற்கு ஆதலால்
கல்லதுபோல் நின்றான் கனிந்து. -12



எண்ணங்கள் இல்லாத ஏகாந்த நன்னிலையில்
புன்னகை பூத்திருக்கும் பேசாத - புண்ணியன்
விண்ணேதான் ஆனதுபோல் வீற்றிருந்தான்; காணயிரு
கண்ணேனும் காணுமோ சொல். *-13*

இன்பதுன்ப மென்னும் இரண்டை கடந்தவரை
அன்பென்ற ஒன்றால் அகம்நிறைப்போம் - என்பவரை
கண்ணாலே காண்பதுவும் நன்றவரை பின்தொடர்ந்து
பின்னாலே செல்வதுவும் நன்று. *-14*

ஓயா தொலிப்பதனை, உள்ளே உணர்வுக்குள்
தீயாய் ஒளிர்வதனைத் தேடுவார்தம் - தேயா
பெருந்திருவைக் கண்டு பொருந்தியிருப் பார்க்கு
வருந்திடாத வாழ்வு வரும். *-15*



மலர்ந்திட்ட பூவாய் மழலை சிரிக்கும்;
உலர்ந்த கனிபோல் விளங்கும் - தளர்ந்த
முதியோர் சிரிப்பு; முனிவோர் சிரிப்பு
நதிபோல் நகரும் நிறைந்து. -16.

அன்னையாய்த் தந்தையாய் ஆசானாய்த் தொல்லுலகில்
தன்னையே காட்டியருள் தந்ததுடன் - முன்னைநான்
செய்துவந்தப் பாவச் செயல்களைத்தன் அன்பாலே
கொய்துநலம் தந்தார் குரு. -17

குடத்தை அமிழ்த்தக் குளத்தின் குளிர்நீர்
குடத்தில் நுழையும்; குருவின் - மடத்தை
அகற்றும் அருஞ்சொல் அகத்தில் நுழைந்து
புகட்டும் அறிவைப் பரிந்து. -18



அய்யன் எனைவென்றான் ஐயமெலாம் தீர்த்திட்டான்;
செய்யெனச் சொன்னதைச் செய்வேன்நான் - பொய்யெனச்
சுட்டியதை எப்போதும் செய்யாமல் விட்டிடுவேன்
எட்டியது போதும் எனக்கு. -19

நிலத்தி லிருந்தெதையும் நோக்குவர் கல்லார்;
நிலத்தி லிருக்கும் நெடிதுயர்ந்த குன்றினின்று
நோக்குவர் கற்றார்; நிலத்தில் நிகழ்கின்ற
போக்கும் வரவும் புரிந்து. -20

வற்றாப் பெருநிதியாய் வந்தாயென் மன்னவனே;
கற்றாலும் கிட்டாத ஞானத்தை - சிற்றா
ளிவனென்று தள்ளாமல் இட்டாய் எனக்கே;
தவமென்ன செய்தேன்நான் தான். - 21



உள்ளிருக்கும் ஒன்றே வெளியிலும் உள்ளதென்று
வெள்ளிடை யாக உணர்ந்தவர்க்கு - கொள்ளிடமும்
இல்லை கொடுப்பிடமும் இல்லை; இருப்பதையும்
இல்லையாய்க் கொள்வார் இயைந்து. -22

அன்பே அறிவாகும்; அன்பை உணர்ந்தவர்க்
கன்பே இறையாகும் என்றறிந்து - அன்பே
உருவான பேரை உறவென்பார்க் கெல்லாம்
திருவாகும் வாழ்வில் தொடர்ந்து. -23

தெரிசனம் கண்டேனென் தேவா வுனது
தெரிசனம் கண்டு தெளிந்தேன்; - பரிசென
வந்தாயென் வாழ்வில் பரமே; பதமெனக்குத்
தந்தாயென் நோயெல்லாம் தீர்த்து. -24



அல்லலுற் றாற்றா தருளமுதம் நாடிநிதம்
தொல்லுலகில் மாந்தனெனச் சுற்றிவந்தேன் - புல்லதுவும்
பூவுலகும் உன்னருளே; பூவான என்னுளத்தும்
நீயுலவக் கண்டேன் நினைந்து. -25

காற்றில் அலைந்தாடும் காய்ந்த இலையாக
நேற்றுமின்றும் காத்திருந்தேன் நாயகனே - சேற்றில்
விழுந்தாலும் சோற்றில் கலந்தாலும் ஒன்றே;
செழுந்தேனா வேனுன்னில் சேர்ந்து. -26

காணும்கண் தன்னைத்தான் காணாத தன்மையாய்
காணும்நான் உன்வடிவை காணவொண்ணேன் - காணுகின்ற
எல்லாமும் நீயென்ற எண்ணத்தால் காணுகின்றேன்
இல்லாத உன்வண்ண மிங்கு. -27



ஒட்டி யிருக்கின்றேன் உன்னோடு; யாராலும்
வெட்டிப் பிரித்திட வொண்ணாமல் - எட்டி
யிருப்பதாய் எண்ணாமல் இங்கின்று நானும்
இருப்பதெல்லாம் உன்னோ டிணைந்து. -28

பாலமாய் நின்றாய் பரத்திற் குமெனக்கும்;
மூலமாய் நிற்கின்ற மெய்ப்பொருளை - ஆழமாய்
கற்கத் துணைநின்றாய்; கோனே; குணக்கடலே;
சற்குருவே உன்தாள் சரண். -29

ஞானம் எனக்களித்து ஞாலத்தில் வாழ்வளித்தாய்
மோனத்தில் பூத்த மலரேதி - யானத்தில்
மூழ்கக் கிடைத்திட்ட முத்தே; குருபரனே
வாழ்கவே நின்புகழ்தே வே. -30



விண்ணில் இருப்பதாய் வீணரிங்கே சொன்னயிறை
மண்ணில் மரத்தில் மனிதரில் - கண்ணில்
தெரிவதைக் காட்டிய சற்குரு வாழ்க;
அறிவதை யேற்ப தழகு. -31

பாடிப் பணிகின்றேன் பாத மலர்தனை;
மூடிக் கிடந்த மடநெஞ்சை - தேடித்
திறந்து தெளிவளித்தாய் சற்குருவே; மண்ணில்
சிறந்ததோர் வாழ்வெனக்குத் தா. -32

உடனிருந்து கற்கின்றேன் உன்னோடு நானும்;
கடனிதனை தீர்த்துக் கழிப்பேன் - மடமிருந்த
நெஞ்சத்தை மீட்டகுரு நன்னெறியில் உய்வித்தாய்;
தஞ்சமுன் பொன்னடி தான். -33



பிறப்பெனக்குத் தாங்காத பாரமென்று தானே
சிறப்புடைய உன்னடியைச் சேர்ந்தேன் - திறப்பொன்று
காட்டித் தெளிவுதந்தாய்; கோன்குருவே நல்லவெண்பா
பாட்டிலுனை வைத்தேன் பணிந்து. -34

முன்னிருந்து நானுன்னை மண்டியிட்டுக் கைதொழுதேன்;
என்னிரண்டு கண்ணான யென்குருவே - பின்னிருந்து
பெற்றவனாய் காப்பாய் பதம்தருவா யென்றிருந்தேன்;
உற்றபிணி நீக்கேன் உவந்து. -35

அறமிது அல்லதிது அன்போடு வாழும்
திறமிது என்று தெரிந்துகொள்ள வாய்ப்பளித்த
ஞான குருவே யெனக்கும் தரவேண்டும்
வானவர் போலொரு வாழ்வு. -36



பார்ப்பதற்குள் பார்ப்பதை பார்க்கும் கலையினை
பார்ப்பவர்க்கு தந்த பரமகுரு - ஆர்ப்பரித்து
ஆடும் மனதினை ஆடா திருத்தியுனைக்
கூடும் நிலையைக் கொடு. *-37*

ஒன்றே அகிலமெலாம் ஒன்றே உயிர்களெலாம்
ஒன்றே உளதெங்கு மென்றுமென - நன்றே
பகன்ற குருநாதா; பாவி எனக்கும்
அகன்றதோர் பார்வை யருள். *-38*

துரும்பிலும் உள்ளதொரு தூயவொளி யென்றாய்;
அரும்பிலும் அஃதேகா ணென்றாய் - விரும்பினும்
இல்லெனினும் உள்ளதிங் கில்லையென்றா காதெனும்
அல்லலில்லா உன்சொல் அரண். *-39*



குருவே சரணம்; குழந்தை மனத்தின்

உருவே சரணம்; உயிராம் - திருவே
சரணம்; உனது சிரிப்பில் மயங்கி
சரணமடைந் தேன்நான் சிலிர்த்து. *-40*





ஆசிரியர் குறிப்பு :

- ச.கந்தசாமி, விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையை பூர்வீகமாகக் கொண்டவர், திருநெல்வேலியில் பிறந்து வளர்ந்தவர்.
- தந்தை சங்கரசுப்பு, தாயார் மல்லிகா.
- தமிழ் இலக்கியத்திலும், பொது நிர்வாகத்திலும் முதுகலைப் பட்டம் பெற்றவர்.
- தமிழ்நாடு மாநில குடிமைப் பணி அலுவலராக பணியாற்றியவர். 2024ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று இந்திய ஆட்சிப்பணி (I.A.S) அலுவலராக பணியாற்றிவருகிறார்.



ஆசிரியரின் பிற நூல்கள்

1. சென்பா நாற்பது	– கீதம் பதிப்பகம்
2. மகளாற்றுப்படை	– சுடர்விழி பதிப்பகம்
3. அகநக (வெண்பா விருந்து)	– கோரல் பதிப்பகம்
4. சென்னிமலை வெண்பாமாலை	– திருக்குறள் பேரவை
5. பண்ணாரி நாயகி	– திருக்குறள் பேரவை





''குருவடி திருவடி'' நூல் முழுதும் குருவின் பெருமைகளைக் கூறுவதுடன், தமிழ்மறை பொழிந்து, வெண்பா வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் பேரழகைக் கண்டேன்; தமிழின் அமுத சொற்கள் இணைந்துள்ள கவியாரம் கண்டு களிப்புற்றேன்.

புலவர். பெ.திருவள்ளுவர்,
சென்னிமலை.